பெரிய தபாற் கந்தோரில் புதினப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

17 AUG 1963

# ஸ்ரீ லங்கா

தகவற்பகுதியின் வாராந்தப் பத்திரிகை.

மலர்: 7

1963, யூலை 24 ந் திகதி

இதழ்: 18

# அரிசி விடயத்தில் சுயபூர்த்தி

## இலங்கையின் சனத்தொகை இப்பொழுது 10,644,809

ஒவ்வொரு பரிபாலன மாவட்டத்தின் குடிசனத் தொகை வருமாறு :—

| | |
|---|---|
| கொழும்பு மாவட்டம் | 2,213,633 |
| களுத்துறை மாவட்டம் | 631,997 |
| கண்டி மாவட்டம் | 1,050,463 |
| மாத்தளை மாவட்டம் | 255,103 |
| நுவரெலியா மாவட்டம் | 405,557 |
| காலி மாவட்டம் | 644,434 |
| மாத்தறை மாவட்டம் | 514,854 |
| அம்பாந்தோட்டை மாவட்டம் | 274,642 |
| யாழ்ப்பாண மாவட்டம் | 612,905 |
| மன்னர் மாவட்டம் | 60,095 |
| வவுனியா மாவட்டம் | 68,712 |
| மட்டக்களப்பு மாவட்டம் | 196,961 |
| திருக்கோணமலை மாவட்டம் | 137,820 |
| அம்பாறை மாவட்டம் | 211,292 |
| குருநாகல் மாவட்டம் | 853,646 |
| புத்தளம் மாவட்டம் | 302,722 |
| அநுராதபுர மாவட்டம் | 309,111 |
| பொலநறுவை மாவட்டம் | 114,104 |
| வதுளை மாவட்டம் | 527,529 |
| மொனராகல மாவட்டம் | 130,612 |
| இரத்தினபுரி மாவட்டம் | 547,583 |
| கேகாலை மாவட்டம் | 581,034 |

1953 ம் ஆண்டு மார்ச் மாதம் 20 ம் திகதி நடைபெற்ற குடிசன மதிப்பின் பின்னர் இலங்கையின் சனத் தொகை 31·5 சத வீதம் அதிகரித்துள்ளது.

**மக்களின் நலன் கருதி அரசாங்கம் நடத்திவரும் சமூகசேவைகள் உதவிப்பணத் திட்டம் குறைவுயாதுமின்றி கொண்டு நடத்தப்பட்டுவருகின்றது. இத்திட்டத்தின் விடயங்களுள் மிகப்பெரியது அரிசி உதவிப்பணத்திட்டமாகும். இலங்கை தனது தேவையைத் தானே பூர்த்தி செய்தற்கு 770 இலட்சம் புசல் நெல் தேவைப்படுகின்றது. இதில் 460 இலட்சம் புசல் மட்டுமே நம்மால் உற்பத்திசெய்யப் படுகின்றது. அரிசி இறக்குமதிக்கு மட்டும் வருடாவருடம் 20 கோடி ரூபாய் அந்நிய செலாவணி செலவாகிறது. ஒரு காலத்தில் இலங்கை கீழ்த்தேசங்களின் நெற்களஞ்சியமாக விளங்கியது. ஆனால் இன்று நமது மிகப் பிரதான உணவுக்கு வெளிநாடுகளை நம்பி இருக்கவேண்டிய நிலையில் இருக்கின்றோம்.**

எமது மக்களிற் பெரும் பகுதியினர் நேரடியாகவோ மறைமுகமாகவோ விவசாயத்தில் ஈடுபடுவோராவர். ஏறக் குறைய 15 இலட்சம் பேர் நெல் வயல்களில் வேலைசெய்கின்றனர். கூடிய சீக்கிரத்தில் இலங்கை தனது நெற் தேவையைத் தானே பூர்த்தி செய்தற்கு உதவுமாறு பயிர்த்தொழிலில் ஈடுபடும் ஒவ்வொருவரையும் நாம் கேட்டுக்கொள்ளுகிறோம். நெற்சாகுபடியை அதிகரிப்பதனுலும் இருபோகங்களில் ஒன்றிலோ மற்றென்றிலோ பயிரிடப்படாதிருக்கும் நெற்காணிகளிற் சில வற்றைப் பயிரிடுவதனுலும் எமது சுயதேவையைப் பூர்த்தி செய்யமுடியும். இப்பொழுது இருக்கும் நெற்காணிகள் யாவையும் அடுத்துவரும் காலபோகத்தில் பயிரிடுவதற்கும் நெற்சாகுபடிக் கேற்ற மற்றும் காணி முழுவதையும் பயிரிடுதற்கும் சகல முயற்சிகளையும் எடுக்குமாறு நெற்காணிகளின் சொந்தக்காரரையும் குத்தகைக்காரரையும் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்விலக்கை அடைதற்கு நீங்கள் எடுக்கும் முயற்சிகளில் சகல உதவிகளையும் புரிய அரசாங்கம் தயாராயிருக்கிறது. பல சேவைகளை ஏற்கெனவே புரிந்துவருகிறது. இச்சேவைகளை நீங்கள் உடனடியாகப் பயன்படுத்தும் பொருட்டு அரசாங்கம், இச்சந்தர்ப்பத்தில், அவற்றைச் சுருக்கமாகக் கூறுகிறது.

### தொழில் நுட்பச்சேவைகள்

விருத்தி செய்யப்பட்ட சாகுபடி முறைகளைக் கையாளுவதன் மூலம் விளைச்சலை அதிகரிக்கலாம். சில விவசாயிகள் ஏக்கர் ஒன்றுக்கு 100 புசல் நெல் உற்பத்தி செய்திருக்கின்றனர். எனவே, இம்முறைகளைக் கையாளுமாறு நாங்கள் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம். சிறந்தவகை விதைகள், நடும்முறைகள், உரமிடுதல், களை, பூச்சி, நோய் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தல் முதலியன விளைச்சலை அதிகரிக்க உதவுவனவாகும். இம்முறைகள் பற்றிய விபரங்களை உங்கள் பகுதிக்குரிய மாவட்ட விவசாய விரிவு உத்தியோகத்தர் உங்களுக்கு உதவுவார். விருத்தி செய்யப்பட்ட சாகுபடி முறைகள் உங்கள் பகுதியில் செய்துகாண்பிக்கப்படும். அவற்றை நேரிற்கண்டு பயனடைவீர்களாக. இம்முறைகள் உங்கள் விளைச்சலை அதிகரிக்க உதவும். உங்களுக்கு உதவி யாதாயினும் தேவைப்படின், கமத்தொழிற் பகுதியின் விவசாயப் போதனாசிரியர்களும், உணவு உற்பத்தி மேற்பார்வையாளர்களும் உதவிபுரியக் காத்திருக்கின்றனர். அவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

### விதை, உரம், பூச்சி, காளான் கொல்லிகள் வழங்கல்

உங்களுக்குத் தேவைப்படும் விதை, உரம், பூச்சி, காளான் கொல்லிகள் முதலிய யாவையும் உங்களுக்கு வழங்குதற்குச் சகல ஏற்பாடுகளையும் அரசாங்கம் செய்திருக்கிறது. இவை உங்கள் ஊரில் உள்ள கூட்டுறவுச் சங்கம் மூலம் வழங்கப்படும். நீங்கள் இச்சங்கத்தில் ஏற்கெனவே அங்கம்வகிக்குமிடத்து, அடுத்துவரும் காலபோகத்திற்கு உங்களுக்கு வேண்டிய யாவுக்கும் இப்பொழுதே சங்கத்திடம் அறிவிக்கவும். அவற்றைக் கடனுகப்பெற்று, அடுத்த ஆண்டு மார்ச் அல்லது ஏப்ரில் மாதத்தில் நீங்கள் அறுவடைசெய்த பின்னர் கடனைத் திருப்பிக் கொடுக்கலாம். சங்கத்தில் நீங்கள் ஏற்கெனவே அங்கம் வகியாதிருப்பின், உடனே சங்கத்திற் சேருங்கள். நீங்களும் தேவைகளைக் கடனுகப் பெற்றுக் கொள்ளலாம். உங்களின் தேவைகளைச் சங்கம் காலாகாலத்தில் உதவும்படி வற்புறுத்துங்கள். உங்கள் தேவைகளைச் சங்கம் அரசாங்கத்திடம் பெற்றுக்கொள்வதில் எவ்வித கஷ்டமும் இல்லை. நல்ல விதையும் உரமும் உபயோகித்தாலன்றி விளைச்சலை அதிகரிக்க முடியாதென்பது ஞாபகத்திலிருத்தல் வேண்டும். அத்தாட்சிப் படுத்தப்பட்ட சிறந்த விதையின் விலை, **புசல் ஒன்றுக்கு 12 ரூபாய் மட்டுமே. இவ்விதையை, நீங்கள் விரும்பினுல், உங்கள் நெல்லுக்குப் பதிலாகப் பெற்றுக்கொள்ளலாம்.** கடைகளில் விற்கப்படும் விலையிற் பாதிவிலைக்கு நீங்கள் உரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் அந்தப்பாதி விலையை ரொக்கமாகச் செலுத்தவேண்டும். அல்லது அதற்கீடாக நெல் கொடுத்தல் வேண்டும். உங்களிடம் நெல்லாயினும் ரொக்கமாயினும் இல்லாவிடத்தும், மூன்றிலிருபங்கு விலைக்கு உங்கள் கூட்டுறவுச் சங்கத்திடம் உரத்தைக் கடனுகப் பெற்றுக் கொள்ளலாம்.

உங்கள் சங்கத்திடம் விவசாய உபகரணங்களையும் பெற்றுக்கொள்ளலாம். வரிசையாக விதையிடுதற்கும், களை பிடுங்குதற்கும் உபயோகிக்கப்படும் உபகரணங்கள் உங்களுக்கு மிகவும் பயன்படும். களைபிடுங்குதலை இலகுவாகவும்

(4 ம் பக்கம் பார்க்க)

# கைப்பணி வினைஞர்களுக்கு உதவி

**நாட்டின் பாரம்பரிய கைப்பணித் தொழில்கள் படிப்படியாக மறைந்து வருவதனைத் தடுப்பதற்கு காணிக் கமிஷனர் பகுதியும், கிராமாபிவிருத்திக் குடிசைக் கைத்தொழிற் பகுதியும் நடவடிக்கை எடுத்து வருகின்றன.**

இதனைக் கருத்திற்கொண்டு கண்டி மாவட்டத்தில் நாத்தரம்பொத்த என்னும் இடத்தில் ஒரு கைத்தொழில் எஸ்ரேற்றை நிறுவி, தேர்ந்தெடுத்த 75 வினைஞர்களையும் அவர்களது குடும்பங்களையும் அங்கு குடியிருத்துவது என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நிலமின்மை; மூலப்பொருள் தட்டுப்பாடு ; லாபகரமற்ற உற்பத்தி முறைகள்; கடன் பெறும் வசதிகளின்மை; விற்பனை வாய்ப்புகள் குன்றிப்போதல் முதலியன வினைஞர்கள் எதிர்நோக்கும் பல கஷ்டங்களுள் சிலவாகும். காணியற்ற, வசதியற்ற வினைஞர்களை குறித்த நோக்கத்துடன் நிறுவப்பட்ட கைத்தொழில் எஸ்ரேற்றுகளில் குடியிருத்தி, அவர்களது கைப்பணியைத் தொடர்ந்து செய்யத் தூண்டுவதே அவர்களுக்குச் செம்மையாக உதவும் முறை என அரசாங்கம் கருதுகிறது.

மூலப்பொருள்கள், கடன்வசதி பொதுவான உற்பத்தி வசதிகள் தொழில் நுட்ப வழி நடத்தல், விற்பனை வசதிகள் முதலியனவே இத்தகைய வினைஞர்களுக்குச் செய்து கொடுக்கப்படவேண்டிய வசதிகளாகும்.

நாத்தரம்பொத்தைத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு வினைஞருக்கும் 25 நிலம் அளிக்கப்படுவதுடன் அதில் வேலைக் கூடம் உட்பட ஒரு குடிசையையும் அமைத்துக் கொடுக்கும். உற்பத்தி வசதிகளைக் கொண்ட ஒரு மத்திய வேலைக்கூடம் மூலப்பொருட்களுக்கும் உற்பத்திப் பொருட்களுக்கும் ஒரு பண்டகசாலை, பொது மண்டபம் முதலியன இக்கைத் தொழில் எஸ்ரேற்றில் நிறுவப்படும். இதற்குத் தண்ணீர் வசதியும் மின்சார வசதியும் கிடைக்கும்.

# தாலாட்டுப் பாடல்கள்

வெள்ளவத்தை மு. இராமலிங்கம்

சகலகலாவல்லியின் கடாட்சம் கிடைக்கப்பெருத இராம நங்கையொருத்தி தன் காதற் கணவனைக் கைப்பிடிக்கும் பொழுது அவள் கண்ட இன்பக் கனவுகளோ எண்ணிலடங்கா, ஆயினும் அவள் வாழ்க்கைப் படகில் கால் வைத்து வருஷங்கள் இரண்டாகுமுன் அவள் கேட்ட பெயர் "மலடி" என்பதாகும்.

அச் சொல் காதில் விழுந்ததும் கலங்கிஞள்; கதறிஞள். அவள் வேண்டாத தெய்வங்கள் இல்லை. ஆடாத தீர்த்தங்கள் இல்லை. செய்யாத யாத்திரை இல்லை. புகாத புண்ணிய ஸ்தலங்கள் இல்லை. கொடாத தான தருமங்கள் இல்லை. நோற்காத நோன்புகள் இல்லை. எனினும் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் ஈசன் அப்பேதைக்கு அருள் புரியவில்லை.

வருஷங்கள் வளர்ந்து சென்றன. எனினும் அவள் மனம் தளராது கடவுளுடன் வாதாடிஞள். இறுதியில் தன் வாதாட்டத்தில் வெற்றி பெற்றே விட்டாள். மணமாகிப் பத்து ஆண்டுகளின் பின்பு பாலச்சந்திரனைப் போன்ற ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தாள். பாலச்சந்திரன் என்றே அவனுக்குப் பெயரையும் சூட்டிவிட்டாள்.

பால் போன்ற நிலவில் தன் அருமைப் பாலகனைத் தன்னுடைய நீட்டிய கால்களில் வளர்த்திக் கொண்டிருக்கின்ருள். பௌர்ணமியன்று பொங்கி எழும் கடலின் அலைகள் போல் கால்களில் பூரணமாகக் கிடந்த தன் குழந்தையைப் பார்க்கும் பொழுது, அவள் மனம் களிப்பில் பொங்கிப் பூரிக்கின்றது. அக் களிப்பில் பழைய நினைவுகள் அவள் மனக்கண் முன் தோன்றுகின்றன.

தாயின் தாள்கள் மீது உல்லாசமாகப் படுத்துக்கொண்டு தாலாட்டுக் கேட்டு இன்புறும் தனயன், தாய்மனம் வேறு எங்கேயோ இலயித்திருந்ததை உணர்ந்தோ உணராமலோ மெல்ல மெல்லச் சிணுங்கத் தொடக்கிஞன். உடனே அவளுடைய தாள்கள் ஆடவும் அவளுடைய நாவினின்றும் சொற்கோவைகள் சொரியவும் ஆரம்பித்தன.

1. மலடி மலடி யென்று
மானிலத்தோர் ஏசாமல்,
மலடிக் கொரு குழந்தை
மாயவனுர் தந்த பிச்சை.

2. இருளி இருளி யென்று
இந் நிலத்தோர் ஏசாமல்,
இருளிக் கொரு குழந்தை
ஈஸ்வரனுர் தந்த பிச்சை.

3. காயா மலடியென்றும்
கள்ளி யென்றும் ஏசாமல்,
காயா மலடிக்குக்
கற்பகனுர் தந்த பிச்சை.

4. ஈனு மலடி யென்றும்
இருளி யென்றும் ஏசாமல்,
ஈனு மலடிக்கு
ஈஸ்வரனுர் தந்த பிச்சை.

5. காயாத புன்னை மரம்
காய்க்கக் கனுக் கண்டவரோ ?
பூவாத புன்னை மரம்
பூக்கக் கனுக் கண்டவரோ !

6. கெட்ட கண்ணைத் தந்தவரோ !
பட்ட குறை தீர்த்தவரோ !
கேளாச் செவியிரண்டும்
தளாத் திறந்தவரோ !

மலடி என்று என்னைச் சொன்னுர்கள். மகாவிஷ்ணு ஒரு மைந்தனை எனக்குத் தந்து விட்டார். இருளியென்று என்னைச் சொன்னுர்கள். ஈஸ்வரன் எனக்கு ஓர் இளஞ் சூரியனைத் தந்து விட்டார். பாலுள்ள மரமாயினும் கள்ளி காய்ப்பதில்லை. பார்வைக்குப் பெண் போன்றவளாயினும் இருளி ஈனுவதில்லை. எனவே காயா மலடி என்றும் கள்ளி என்றும் என்னைச் சொன்னுர்கள். சற்பகனுர் எனக்கு ஒரு கைக் குழந்தையைத் தந்து விட்டார். ஈனு மலடி என்றும் இருளி என்றும் என்னைச் சொன்னுர்கள். ஸ்வரனுர் எனக்கு ஓர் இளஞ்சூரியனைத் தந்துவிட்டார். காயாத புன்னை மரம் காய்த்து விட்டது. பூவாத புன்னை மரம் பூத்து விட்டது. கெட்ட கண் பார்வை பெற்று விட்டது. கேளாச் செவிகளும் திறக்கப்பட்டுவிட்டன என்ருள்.

புத்திரச் செல்வம் வேண்டித் தான் பட்ட பாடுகளும் ஆடிய தீர்த்தங்களும் நோற்ற நோன்புகளும் செய்துவந்த தானங்களும் அவள் நினைவுக்கு வருகின்றன. தன்னையும் மறந்து தாலாட்டுகிருள்.

7. ஆறிரண்டுங் காவேரி
அதன் நடுவே ஸ்ரீரங்கம் ;
ஸ்ரீரங்க மாடித்
திருப்பாற் கடலாடி ;

8. மாமாங்க மாடி,
மறுதலங்கள் நீராடி,
தைப்பூச மாடித்
தவசு பண்ணி வந்தவரோ ?

காவேரி ஆறு ஸ்ரீரங்கத்துக்கு அருகில் வந்ததும் கொள்ளிடம், காவேரி என இரண்டாகப் பிரிகின்றது. இரண்டிற்கும் இடையே யிருப்பது ஸ்ரீரங்கம், எனவே "ஆறிரண்டுங் காவேரி, அதன் நடுவே ஸ்ரீரங்கம்" என்ருள். திருமால் இங்கே கோயில் கொண்டிருக்கின்ருர்.

காவேரி அகத்தியரின் மனைவியாவாள். அகத்தியர் வரத்தால் எல்லாத் தீர்த்தங்களும் வணங்கும் வரம் அடைந்து, அண்ட காவேரி எனப் பெயர்பெற்று உலகத்தார் பாவங்களைப் போக்குபவள். அகத்தியர் கமண்டலத்திருந்த இவளை, இந்திரன் வேண்டுகோளால், விநாயகர் காக உருக்கொண்டு உருட்ட, நதி உருவாய்ப் பிரவகித்தனள் எனப் புராணங்கள் கூறும்.

திருப்பாற்கடல் சப்த சமுத்திரங்களில் ஒன்று. இதில் திருமால் ஆலிலைமீதும் திரு அநந்தாள்வான் மீதும் எழுந்தருளி அடியவர்க்கு அருள் செய்திருக்கின்றனர்.

மாசி மாதத்தில் குரு சிங்கராசியிற் சேரும் புண்ணிய தினம் மகாமகம், மாமாங்கம் எனப்படும். மாமாங்கம் பன்னிரண்டு வருடத்திற்கொரு முறை கும்பகோணத்திற் கொண்டாடப்படுகிறது.

தை மாசத்துப் பூசத் திருநாள் தைப் பூசம் எனப்படும். இது இந்துக்களால் கொண்டாடப்படுகிறது.

9. பிள்ளை இல்லை யென்று
பெருந் தவங்கள் செய்தேனே !
மைந்தன் இல்லை யென்று
மாதவங்கள் செய்தேனே.

10. பாவல் மலரெடுத்து
பகவானைக் கை தொழுது
தும்பை மலரெடுத்துச்
சூரியனைக் கை தொழுது,

11. வெந்த மாத் தின்ருல்
விரதம் அழியு மென்று,
பச்சை மாத் தின்று
பகவானைக் கை தொழுது,

12. வெள்ளிக் கிழமை
விரத மகத்துவத்தால்
பிள்ளைக் கலி தீர்க்கப்
பிறந்த நவரசமோ !

வெள்ளிக்கிழமை விரதம் பிள்ளைக் கலிதீர்க்கும் என்று ஏன் சொன்னுள் ? சுக்கிரவார விரதம், அஃதாவது வெள்ளிக்கிழமை விரதம், தேவர்கள் மூவர்களின் அநுக்கிரகத்தை நாடி உபாசனை செய்யப்படுவதாகும். உமா தேவியாரைக் குறித்து அனுஷ்டிக்கப்படுவது ஒன்று. விநாயகரைக் குறித்து அனுஷ்டிக்கப்படுவது மற்றென்று. சுப்பிரமணியரைக் குறித்து அனுஷ்டிக்கப்படுவது இன்னென்று. உமாதேவியைக் குறித்து வருவது சித்திரை மாதத்துச் சுக்கில பக்ஷத்து முதல் வெள்ளிக்கிழமை தொடங்கும். விநாயகரைக் குறித்து வருவது வைகாசி மாதத்துச் சுக்கில பக்ஷத்து முதற் சுக்கிர வாரத தொடங்கும். சுப்பிரமணியரைக் குறித்து வருவது ஐப்பசி மாதத்து முதற் சுக்கிர வாரந் தொடங்கும். அற்புதம், இரௌத்திரம் கருணை, குற்சை, சாந்தம், சிங்காரம், பயம், பெருநகை, வீரியம் ஆகிய உன்பது சுவைகளும் நவரசங்களாம்.

13. பரமசிவன் வாசலிலே
பலநாள் தவமிருந்து,
பரமசிவனுர் தந்த
பைங்கிளியே கண்வளராய்.

14. ஈஸ்வரியாள் வாசலிலே
இரந்து தவங் கிடந்து,
ஈஸ்வரியாள் தந்த
இந்திரனே கண்வளராய்.

பாலுள்ள மரங்கள் யாவும் காய்க்க வேண்டும் என்பது பொது விதி. விவாகப் பொருத்தங்களுள் ஒன்ருகிய விருக்ஷப் பொருத்தமும் இதனையே குறிக்கின்றது. எனினும் சில மரங்கள் காய்ப்பதில்லை. காயா மரங்களின் கிளைகளைக் கிள்ளிவிட்டால் அவை புதுக் கிளைகள் விட்டுக் காய்க்கின்றன. இன்னுஞ் சில மரங்களின் கிளைகளை வருஷா வருஷம் ஒடித்துவிட்டால் அவை புதுப் புதுப் கிளைகள் பல பரப்பி அதிகமாகக் காய்க்கின்றன. முருங்கை மரம் இதற்கு ஓர் உதாரணம். ஆகவே, "அடித்து வளர்க்காத பிள்ளையுமில்லை ; முறித்து வளர்க்காத முருங்கையுமில்லை" என ஒரு பழமொழி தமிழ் நாட்டில் வழங்கி வருகின்றது. என்னதான் செய்த போதும் சில மரங்கள் ஒரு போதும் காய்ப்பதில்லை. யாழ்ப்பாணத்தில் எங்கள் வளவுரு ஒன்றில் "மலடி" என்னும் பெயர் கொண்ட ஓர் இலுப்பை மரம் இன்றும் நிற்கின்றது. அது காய்ப்பதேயில்லை.

நாட்டுப் புறங்களில் கார்த்திகை மாதங்களில் சிறுவர் என்று சேர்ந்து கார்த்திகைப் பூக்கள் பூத்திருக்கின்றனவா எனத் தேடித் திரிந்து பார்த்துப் பறித்து விளையாடுவர். இந்தக் கொடியானது கார்த்திகை மாதங்களிலே மட்டும் பூக்கும். "மலடி" எனப் பெயர் வாங்கிய தன் வயிற்றில் கார்த்திகைப் பூப் போல் வந்துதித்தான் தன் மகன் எனப் பெருமிதமுறுருள் அவ்வன்னை.

15. காயாது காய்த்த நீரோ !
கார்த்திகைப் பூப் பூத்தநீரோ!
பூவாத மாவிலேயோ
புட்பித்த புண்ணியரோ !

16. மலடி திரு வாசலிலே
மான் கன்ருய் வந்தநீரோ !
இருளி திரு வாசலிலே
ஒளி விளக்காய் வந்தநீரோ !

வள்ளி நாய்ச்சியாரையே மான் கன்று என அன்னை குறிக்கின்ருள். வள்ளி நாய்ச்சியாரின் பூர்வ நாமம் குமரி. விஷ்ணு மூர்த்தியின் வலக் கண்ணில் பிறந்தவள். வள்ளி நாய்ச்சியார் குமாரக் கடவுளை மணக்கத் தவஞ் செய்து இருக்கையில் அருகில் தவஞ்செய்து கொண்டிருந்த சிவ முனிவர் அவ்விடம் மேய்ந்து கொண்டிருந்த மானை நோக்கினர். வள்ளி நாய்ச்சியார் அம்மான் வயிற்றில் பிரவேசித்து அவ்விடம் குறவர் தோண்டியிருந்த வள்ளிக் குழியில் பிறந்து வேடராசன் சண்டெடுக்க வளர்ந்து குமாரக் கடவுளை மணந்தாள். தன் மகனும் வள்ளி நாய்ச்சியாரைப் போல் ஓர் அவதாரம் என்பது அன்னையின் கொள்கை.

அக்கினி இந்துக்களின் அட்டதிக்குப் பாலகர்களுள் ஒருவர். விளக்கு அட்ட மங்கலத்துள் ஒன்று.

இப்படியாகத் தாலாட்டிக் கொண்டிருக்கும் போது அவள் கணவர் ஏர்களுடன் வீடு வரும் நேரமாகவே அவனுடைய நினைவும் வருகின்றது. தன்னை மலடியென்று ஊரவர் வைதபோதும் தன் மனம் நோகாது தன்னை அன்புடன் காப்பாற்றியது மல்லாமல், தன்னுடன் அவனும் சேர்ந்து செய்த தான தருமங்களின் நினைவே அவளுக்கு வருகின்றது.

17. தூரத்துக் கோயிலுக்குத்
தூண்டாவிளக் கேற்றுவிப்பார்
காதத்துக் கோயிலுக்குக்
காணிக்கை போடுவிப்பார்.

18. எட்டாத கோயிலுக்கு
எட்டி விளக் கேற்றுவிப்பார் ;
காணுத கோயிலுக்குக்
காணிக்கை போடுவிப்பார்.

19. மடிக்குழந்தை வேணுமென்று
மாதவங்கள் செய்தவரோ !
கைக்குழந்தை வேணுமென்று
கடுந்தவங்கள் செய்தவரோ ?

தான தருமங்கள் செய்வதுடன் அவன் நின்று விடவில்லை. அவன் கோயில்கள் கட்டுவித்து, குளங்கள் வெட்டுவித்து, அன்னதானங்கள் பல செய்து வந்தது அவள் ஞாபகத்திற்கு வரவே.

20. குளிக்கக் குளம் வெட்டி
கும்பிடக் கோயில் கட்டி
படுக்க மடங் கட்டுவிப்பார்
பாக்கியவான் உங்களப்பா.

21. பந்தம் பிடித்துப்
பசித்தாரை ஆராய்ந்து
கூடையிலே சோறும்
குடத்திலே நீர்மோரும்

22. தாராளமாய் எடுத்துத்
தயவாகவே கொணர்ந்து
ஆராய்ந்து அன்னமிடும்
அருச்சுனராம் உங்களப்பா.

என்று தாலாட்டுகிருள்.

வெண்ணிலவைக் கண்டதும் செவ்வல்லிக் கொடி மலர்கின்றது. நிலவு மறையும் வரை அல்லியின் இதழ்கள் கூம்புவதில்லை. அது போலவே அன்னையின் முகத்தைக் கண்டதும் குழந்தையின் கண்கள் மலர்கின்றன. தாய் எதிரே நிற்கும் வரை தனயன் தன் விழிகளை மூடுவதில்லை. எனவே புலவர்கள் அன்னையின் முகத்தை நிலவுகொளிக்கும் மதிக்கும் சேயினைச் செவ்வல்லிமலருக்கும் ஒப்பிடுகிருர்கள்.

குழந்தை தன் கண்களை மூடி அயர்ந்து தூங்கட்டும் என்றே தாலாட்டுப்

(4 ம் பக்கம் பார்க்க)

# புகழுடம் பெய்திய உபவேந்தர்

## சீரிய கல்விமானுகத் திகழ்ந்த சோரத நாயக்கா தேரோ

வித்தியோதயப் பல்கலைக்கழக உப வேந்தராக விருந்த வணக்கத்துக்குரிய வெலிவிட்டிய சோரத நாயக்க தேரோ அவர்களின் எதிர்பாராத மரணம் புத்த சமயத்தைச் சேர்ந்தவர்களையும் இலங்கையிலுள்ள கல்விமான்களையும் இன்று சோகக்கடலில் ஆழ்த்தியிருக்கிறது. அபூர்வ சாதனைகளையீட்டிய இப் பெரியாரின் மரணத்தால் ஏற்பட்டிருக்கும் குறையை ஈடு செய்வது சிரமமே.

சிங்கள மொழியிற்போல சமஸ்கிருதம் பாளி ஆகிய மொழிகளிலும் இவர் வல்லுனராக விளங்கினுர். தமிழ் மொழியிலும் இவருக்குச் சிறந்த அறிவு இருந்ததோடு இந்தி, வங்காளி மொழிகள் போன்ற நவீன இந்திய மொழிகளிலும் இவர் பரிச்சயமாகவிருந்தார். இவைமட்டுமல்ல. ஆங்கில, ஜெர்மன் மொழிகளிலும் இவருக்குப் போதிய திறமையிருந்தது.

பாளி மொழியில் பல்வேறு துறைகளிலுள்ள எண்ணற்ற நூல்களைக் கற்றுணர்ந்திருந்தார் இவர். சமஸ்கிருத இலக்கணத்திலுள்ள பல்வேறு முறைகளையும் கசடறக் கற்றதோடு அம்மொழியிலுள்ள எண்ணற்ற பாடல்களையும் ஆய்வு நோக்குடன் படித்திருக்கிறுர் இவர். இம் மொழிகளில் இவர் பெற்ற அறிவு ஈடும் இணையுமற்றதாகும். இப்படிப்பட்டதொரு கல்விமானை இழந்திருப்பது ஈடு செய்ய முடியாததொரு நஷ்டமாகும் இந்நாட்டுக்கு.

இவர் புத்த பிக்குவாக இருந்த இளமைக்காலத்தில் மரபு வழிகளில் பயிற்சியளிக்கப்பட்டதால் எதையும் ஞாபகத்தில் வைத்திருக்கும் அபார சக்தி இவருக்கு ஏற்பட்டது. முதுமையடைந்த பின்னரும்கூட இளமையில் தாம் கற்றவற்றையெல்லாம் ஒன்றும் விடாமல் சொல்லிக்காட்டுவாறெனின் இவரது அபார ஞாபகசக்தியை என்னென்றுரைப்பது.

கீழைத்தேய மரபு வழிநின்று கல்வி பயின்ற இவர் மேல்நாட்டு மொழிகளான ஆங்கில மொழியையும் ஜெர்மன் மொழியையும் அவற்றின் பயன் உணர்ந்து விரும்பிக்கற்றுர்.

வித்தியோதயப் பிரிவேனையில் திறமையான மாணவராக விளங்கிய காரணத்தால் அப்பிரிவேனையிலேயே ஒரு ஆசிரியராக நியமிக்கப்பட்டார். தன்னிடமுள்ள அறிவுக் களஞ்சியத்தை அங்குள்ள இளம் பிக்குகளுக்கும் தன்னிடம் கற்றுணர வந்த பாமரர்களுக்கும் அள்ளி யள்ளி வழங்கிய அதேசமயத்தில் ஓய்வு நேரங்களின்போது இலக்கிய வேலைகளிலும் ஈடுபட்டார் இப்பெரியார். பாளி சமஸ்கிருதம் சிங்களம் ஆகிய மொழிகளில் இவர் பல நூல்களை எழுதினுர். இவரது சிருஷ்டிகளைப் படிப்போர் இவருக்கிருந்த கல்வி ஞானத்தை உணரத் தவறமாட்டார்கள். சிக்கல்கள் நிறைந்த சிங்களக் கவிகளை மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளக்கூடியதான முறையில் இவர் திருத்தியமைத்தது இவரது சாதனைகளிலொன்று. தானுகவே தனித்து ஒரு சிங்கள அகராதியை உருவாக்கியது இவரது மற்றொரு சாதனை. நீண்டகாலத்தேவையான இந்த அகராதியிலுள்ள சொற்களும் அதற்கான சரியான கருத்துக்களும் மாணவர்களும் ஏனையோரும் எளிதில் புரிந்து கொள்ளத்தக்கன. ஆகவே இவர்களுக்கு இந்த அகராதி ஒரு வரப்பிரசாதமாகும். சிங்கள இலக்கியத்தில் வரும் சகல சொற்களையும் அவற்றின் சரியான பொருளையும் தாங்கிநிற்கும் இந்த அகராதியை இந்த வரப்பிரசாதத்தை தனது உடல் நலத்தைக்கூடக்கருதாது அல்லும் பகலும் உழைத்து சிருஷ்டித்து அளித்த இப்பெரியாருக்கு சிங்கள மொழி பயிலும் மாணவர் உலகம் என்றென்றும் கடமைப்பட்டிருப்பதோடு இவரை என்றுமே மறக்க முடியாது.

கல்விக்கு இவர் ஆற்றிய அளப்பரிய சேவை காரணமாகவும் இவர் அறிவாற்றல் காரணமாகவும் வித்தியோதயப் பிரிவேனையின் அதிபராக 1957 ஆம் ஆண்டில் இவர் நியமிக்கப்பட்டார். 1958 ஆம் ஆண்டில் இப்பிரிவேனை பல்கலைக் கழக அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டபோது வணக்கத்துக்குரிய



வண. சோரத நாயக்க தேரோ

சோரதநாயக்க தேரோ அவர்கள் அதன் முதல் உப வேந்தராகத் தெரிவு செய்யப்பட்டார். ஒரே கல்வித் தாபனத்தில் மாணவனுகவும் ஆசிரியராகவும் பின்னர் அதிபராகவும் இறுதியில் அதன் முதல் உப வேந்தராகவும் இருந்த பெருமை இப் பெரியாரையே சாரும்.

இப்பெரியார் பாளி, சமஸ்கிருதம், சிங்களம் ஆகிய மொழிகளில் இலக்கியங்களை மட்டுமல்லாது எண்ணற்ற கவிதைகளையும் சிருஷ்டித்திருக்கிறுர். தனது நேரம் முழுவதையும் இலக்கியப் படைப்பிலும் கல்விப்பணியிலும் செலவளித்துக் கொண்டிருந்த நேரத்திலும் இலக்கிய, இலக்கண ஆராய்ச்சி துறைகளில் தன்னிடம் உதவியும் ஆலோசனையும் கேட்டு வருபவர்களை சாதி மத பேதமின்றி இன்முகத்துடன் வரவேற்று, உபசரித்துத் தன்னுலான உதவிகளையும் ஆலோசனைகளையும் அளித்தனுப்பும் சிறந்த பண்பைக் கொண்டிருந்தார் இவர்.

இவரது உயர்ந்த பண்பைக்கண்டு போற்றுகார் யாருமிலர். எம்மதத்தினரும் மரியாதையும் அன்பும் செலுத்தும் உன்னத புருஷராக விளங்கிய இக்கல்விமானின் எதிர்பாரா மறைவு இலக்கிய உலகுக்கு ஈடு செய்ய முடியாததொரு நஷ்டமாகும்.

# நவமணிகள்

ஒளி மிகுந்த கற்களை மணிகள் என்று வழங்குகின்ருேம். இவை நிலத்தினின்றும் உலோகங்களைப் போலவே வெட்டியெடுக்கப்படுகின்றன. இம்மணிகள் சுரங்கத்தினின்று வெட்டி எடுக்கையிற் காடுமுரடாகவும் ஒழுங்கின்றியும் மழுங்கியிருண்டும் இருக்கும். பின்னர், இவைகளை வேண்டும் அளவாக அறுத்துத் தக்கவாறு படை தீர்த்து, உலோகங்களில் பதிய வைத்து ஒன்ருேடொன்றைச் சேர்த்துத் தேய்த்தாவது, சக்கரத்தில் சாணை பிடித்தாவது மெருகிடுவர். சில பொருள்களைக் கூட்டி உருக்கி இக்கற்களைப்போலவே செயற்கையாகப் போலிக் கற்கள் செய்தலும் உண்டு. இப் போலிக் கற்கள் வேலைப்பாடு அமைந்து ஒளி சிறந்திருக்குமாயின் இவற்றிற்கும் உண்மைக் கற்களுக்கும் வேறுபாடே பொதுமக்களுக்குத் தெரியாது. இரத்தினப் பரீட்சை நிபுணர்களே அதனைக் கண்டு தெளிய வல்லர். நமது நாட்டிலே ஒன்பது வகைக் கற்கள் வழங்கி வருகின்றன. அவைகளை நவரத்தினங்கள் என்றும் நவமணிகள் என்றும் பாராட்டிக் கூறுகின்றனர். வச்சிரம், பதுமராகம், மரகதம், நீலம், கோமேதகம், புஷ்பராகம், வைடூரியம், பவளம், முத்து என்பன நவமணிகளாம். பவளமும் முத்தும் மற்ற மணிகளைப்போலக் கனிகளினின்றும் எடுக்கப்படுவன அல்ல. அவை கடல்களிலே கிடக்கின்றன.

### வச்சிரம்

இஃது ஒன்பது மணிகளில் மிகவும் உயர்ந்தது. இது வைரம் என வழங்கப்பட்டு வருகிறது. இவ்வுலகிலுள்ள பொருள்களில் எல்லாம் மிக உறுதியும் கடினமும் உள்ள பொருள் வைரமேயாகும். நம் முன்னேர் பண்டைக்காலத்திற் போர்த்தொழிற் குரிய சில படைகளை வச்சிரத்தினுல் செய்து உபயோகித்து வந்தனர். இந்திரன் கைப்படை வச்சிரமேயாகும். வயிரத்தை "மணிக்கரசு" என்று மேல்நாட்டார், புகழ்வர். சிறந்த வைரம் இந்தியாவில் கோல்கொண்டா, பண்டல்கண்டு என்னும் இடங்களில் காணப்படுகின்றது. தென் அமெரிக்காக் கண்டத்திலுள்ள பிரேஜில் என்னும் தேசத்திலும், தென் ஆப்பிரிக்காவிலும் வச்சிரம் அகப்படுகின்றது. இலட்சாதிபதிகளும் கோடீசுவரரும் பெரிய வைரமணிகளைப் பெருவிலை கொடுத்து வாங்குவர். போர்த்துக்கல் தேசத்து அரசனிடம் இருக்கும் ஒரு வைரக்கல் மிகப் பெரியது. ஈராயிரத்து ஐந்நூற்றிருபது குன்றிமணி எடையுள்ளது. அந்த வச்சிரத்தின் மதிப்பு இருநூற்று இருபத்துநாலு கோடி ரூபா என்பர்.

இந்துஸ்தானி மொழியில் ஒளிமலை என்னும் பொருளுடைய கோஹினூர் என்னும் பெயர்போன ஓர் வச்சிரக்கல் கோல்கொண்டாக் கனியில் பல்லாண்டுகட்கு முன்பு அகப்பட்டது. முதன்முதல் அது மொகலாய சக்ரவர்த்தியாயிருந்த ஷாஜஹானிடத்திலும் பிறகு அவனுக்குப் பின் அரசுபுரிந்த மன்னவர்களிடத்திலும் இருந்து கடைசியாகப் பாஞ்சால தேசாதிபதியாகிய இரஞ்சித் சிங்கினிடத்திற் போய்ச் சேர்ந்தது. ஆயிரத்து எண்ணூற்று ஐம்பதாம் ஆண்டில் அப்பாஞ்சால தேசம் ஆங்கிலேயர் உரிமையில் வர அந்த வச்சிரமணி விக்டோரியா மகாராணியார் அவர்களிடம் சேர்க்கப்பட்டது. அது வேலைப்பாடு இல்லாத போது ஆயிரத்திருநூறு மஞ்சாடி எடையுள்ளதாக இருந்தது. இருமுறை சீர்திருத்தம் அடைந்த பிறகு இருநூற்றிருபது மஞ்சாடி எடையாகக் குறைந்தது. அஃது இப்போது விண்ட்சர் மாளிகையில் வைக்கப்பட்டுள்ளது. வச்சிரக் கல்லை ஆபரணங்களில் வைத்து இழைத்து மக்கள் அணிவர். அது கண்ணுடியை அறுக்கும் கருவியாகவும் பயன்படும். வைரத்தைக் கொண்டே வைரத்தை அறுக்க வேண்டும்.

### பதுமராகம்

பதுமராகம் விலைமதிப்பதில் வச்சிரத்துக்கு அடுத்த படியில் உள்ளது. இது செந்நிறம் உடையது. இதனை மாணிக்கம் எனப் புகழ்ந்துரைப்பர். கெம்பு என்று சாதரணமாக வழங்குவதும் உண்டு. இது பர்மா, சீயம், இலங்கை ஆகிய இத்தேசங்களில் அகப்படுகிறது. பர்மாவில் அகப்படும் பதுமராக மணிகள் மிகச் சிறந்தவை.

### மரகதம்

மரகதத்தின் நிறம் பசுமை. இதனைப் பச்சையென்றும் வழங்குவர். விலை

(4 ம் பக்கம் பார்க்க)

# இலங்கை வானொலி நிகழ்ச்சிகள்

**26.7.63 தொடக்கம் 28.7.63 வரை**

## தேசிய ஒலிபரப்பு

### வெள்ளி

**ஜூலே 26**

காலே

6.45 பாமாலே—
6.55 இஸ்லாமிய நற்சிந்தனே—ஏ. எம். எம். உவைஸ்
7.00 செய்திகள்
7.10 அறிவிப்புகள்
7.15 தோத்திரப் பாடல்கள்—பி. முத்துக்குமாரு
7.45 திரை இசை
8.15 இஸ்லாமிய கீதம்
8.30 ஒலிபரப்பு முடிவு

பகல்

12.00 சித்ரகானம்
12.45 செய்திகள்
12.55 அறிவிப்புகள்
1.00 கதம்ப இசை
1.30 ஒலிபரப்பு முடிவு

மாலே

5.00 சிறுவர் பகுதி—பிறந்ததின வாழ்த்துக்கள்
5.15 நாகசுரம்
6.00 செய்திகள்
6.10 விலேவாசிகள்
6.15 கிராம சஞ்சிகை—தேச வளம்—யுனெஸ்கோ சித்திரம்
6.45 வீணே—
7.00 ஞானஞ்சலி—
7.30 நேயர் விருப்பம்
8.00 முஸ்லிம் நிகழ்ச்சி—உறுதுப் பாடல்கள்
8.15 நாடகம்—(மறுஒலிபரப்பு)
8.45 இஸ்லாமிய கீதம்
9.00 செய்திகள்
9.10 அறிவிப்புகள்
9.15 விமர்சனம்
9.30 கதாப் பிரசங்கம்—வி. கே. ஆறுமுகம்
10.15 இசையமுதம்
10.30 ஒலிபரப்பு முடிவு

### சனி

**ஜூலே 27**

காலே

6.45 உதயகீதம்
6.50 சைவ நற்சிந்தனே—இ. இரத்தினம்
6.55 கிறிஸ்தவ நற்சிந்தனே—எஸ். ஜெபநேசன்
7.00 செய்திகள்
7.10 அறிவிப்புகள்
7.15 மூவர் இசை
7.45 திரை இசை
8.15 இஸ்லாமிய கீதம்
8.30 ஒலிபரப்பு முடிவு

பகல்

12.00 சித்ரகானம்
12.45 செய்திகள்
12.55 அறிவிப்புகள்
1.00 கதம்ப இசை
1.30 ஒலிபரப்பு முடிவு

மாலே

5.00 சிறுவர் பகுதி—பிறந்ததின வாழ்த்துக்கள்
5.15 இளைஞர் மன்றம்—
5.45 திரை இசை
6.00 செய்திகள்
6.10 விலேவாசிகள்
6.15 கிராம சஞ்சிகை—தேசிய சேமிப்பு
6.45 வயலின்—பி. வைத்தியநாத சர்மா
7.15 கண்டதும் கேட்டதும்—செய்திச் சுருள்
7.30 நேயர் விருப்பம்
8.00 முஸ்லிம் நிகழ்ச்சி—மலாய்ப் பேச்சு—" வாரீர் மலாயீர் "—எம். அமீன் அக்பர்
8.15 பேச்சு—" இஸ்லாமிய இல்லமும் இல்லாளும் "—செல்வி பாத்தும்மா பீபீ
8.30 பாட்டு—மொஹிதீன் பேக்
9.00 செய்திகள்
9.10 அறிவிப்புகள்
9.15 பேச்சு—வானொலி வைத்தியர்
9.30 பாட்டு—சரஸ்வதி பாக்கியராஜா
10.30 ஒலிபரப்பு முடிவு

### ஞாயிறு

**ஜூலே 28**

காலே

6.45 பாமாலே
6.55 கிறிஸ்தவ நற்சிந்தனே—என். ஜெபநேசன்
7.00 செய்திகள்
7.10 அறிவிப்புகள்
7.15 தேர்ந்த இசை
7.45 திரை இசை
8.15 தமிழ் மூலம் சிங்களம்—என். டி. பீரிஸ்
8.30 ஞானஞ்சலி—(மறுஒலிபரப்பு)
9.00 இஸ்லாமிய சமயப் பாடசாலே—நடத்துபவர் மௌலவி எம். ஏ. ரகுமான்
9.30 கத்தோலிக்க நிகழ்ச்சி—
10.00 ஒலிபரப்பு முடிவு

பகல்

11.30 சிறுவர் மலர்—தயாரிப்பு வானொலி மாமா
12.15 நேயர் விருப்பம்
12.45 செய்திகள்
12.55 அறிவிப்புகள்
1.00 மாதர் பகுதி—1. எழில் தரும் இல்லப் பூங்கா—பேச்சு—திருமதி நரேந்திரா
2. குழந்தைகளும் பெற்ருேரும்—பேச்சு—ஷாஜஹானி புஹாரி
3. உலக நாடுகளில் பெண்கள்—பேச்சு—அலிஸ் ஜூயிஸ்பிள்ளே
1.30 ஒலிபரப்பு முடிவு

மாலே

5.00 சிறுவர் பகுதி—பிறந்ததின வாழ்த்துக்கள்
5.15 பாட்டு—டி. எம். வேதாரண்யம்
5.45 திரைக்குரல்
6.00 செய்திகள்
6.10 வாத்திய இசை
6.15 பூசையும் கூட்டுப் பிரார்த்தனேயும்—இந்துப் பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலிலிருந்து அஞ்சல்
7.15 மாதர் கேட்டவை
7.30 பாட்டு—ஜகதாம்பிகை ஆனந்தநாயகம்
8.00 முஸ்லிம் நிகழ்ச்சி—மணி மொழிகள்—மௌலவி ஸெயிது பஸ்லுல்லாஹ்
8.15 மாணவர் மன்றம்—கும்பனித்தெரு மு. ம. வித்தியாலயம்
8.30 நேயர் கேட்டவை
9.00 செய்திகள்
9.10 அறிவிப்புகள்
9.15 நாடக அரங்கு—" மகாகாவியம் " — அருள் செல்வநாயகம் எழுதியது
10.15 இசையமுதம்
10.30 ஒலிபரப்பு முடிவு

# அரிசி விடயத்தில் . . .

(1 ம் பக்கத் தொடர்)

விரைவாகவும் நீங்கள் செய்யமுடியும். உடனே சங்கத்திடம் உங்கள் தேவையை அறிவிப்பீர்களானல், ரொக்கத்திற்காயினும் கடனுகவாயினும் இவ்வுபகரணங்களேப் பெற்றுக் கொள்ளலாம்.

**விவசாயக் கடனுதவி**

கடன் வசதிகளில்லாமை முற்காலத்தில் ஒரு தடையாக இருந்தது. அதனுல் கிராமப் பயிர்த்தொழிலாளர் கடனுளிகளாயினர். இக்கடன்கள் காரணமாக விவசாயிகள் அதிக வட்டி செலுத்துவதோடு, கடன் உதவியவர்களிடம் தமது அறுவடையை உத்தரவாத விலேயாகிய 12 ரூபாய்க்குக் குறைவாகவும் ஒப்படைக்கவும் நேர்கிறது.

ஊரிலுள்ள கூட்டுறவுச் சங்கம்மூலம் பயிர்த் தொழிலாளருக்குக் கடன் கொடுக்கும் திட்டத்தை அரசாங்கம் திருத்தியமைத்துள்ளது. இப்பொழுது, பின்வரும் நோக்கங்களுக்காக, ஏக்கர் ஒன்றுக்கு 175 ரூபாய் வரையில் நீங்கள் கடன் பெறலாம்.—

| | ரூ. ச. |
|---|---|
| விதை நெல் 2 புசல் | .. 24 00 |
| உரம் 3 அந்தர் | .. 36 00 |
| நாற்று நடுதல் அல்லது வரிசை விதையிடல் | .. 25 00 |
| களேபிடுங்குதல் அல்லது களேக் கொல்லிகளே உபயோகித்தல் | .. 25 00 |
| உழுதல் .. | .. 40 00 |
| அறுவடை செய்தல் | .. 25 00 |
| | 175 00 |

உங்கள் காணியின் நிலப்பரப்புக்கும் கூட்டுறவுச்சங்கத்தில் உங்களுக்குள்ள பங்குகளின் தொகைக்கும் ஏற்றவாறே உங்கள் கடன்பெறும் தகுதி அதிகரிக்கும். அறுவடையின்போது விற்பனவு முன்பணமொன்றையும் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். ஆனல், உத்தரவாத விலேயாகிய புசலொன்றுக்கு ரூபா. 12/- வீதம் உங்கள் நெல்லேக் கூட்டுறவுச் சங்கத்திடம் விற்க நீங்கள் சம்மதித்தல் வேண்டும். இக்கூட்டுறவுச்சங்கங்கள் உங்கள் சாகுபடிக்கு வேண்டிய யாவையும் வழங்கும். உங்களுக்கு மிகக்கிட்டிய கூட்டுறவுச் சங்கத்திடம் மற்றும் விவரங்கள் யாவையும் பெற்றுக்கொள்ளலாம். உங்களுக்கு உதவப்படும் சகல வசதிகள் பற்றியும் அவை கூறக்கூடியன.

விவசாய விரிவு சேவைகள் மிகச்சிறந்த சாகுபடி முறைகள்பற்றி உங்களுக்குத் தகவல் தெரிவிக்குமென்பது ஞாபகத்தில் இருத்தல் வேண்டும். கமத்தொழிற் சேவைகள் உங்கள் தேவைகள் யாவையும் வழங்குவதோடு, கூட்டுறவுச் சங்கங்களுடன் சேர்ந்து உங்களுக்கு வேண்டிய கடன்களே உதவும். இச்சேவைகளேப் பயன்படுத்துவீர்களாக. இவை உங்கள் நலன்கருதி அரசாங்கத்தால் உதவப்படுகின்றன. இவை சம்பந்தமாக, பிரச்சனேகள் எவையாயினும் எழின், " பிரதி கமத்தொழிலதிபர் (நெல் உற்பத்தி), பி. எஸ். எஸ். ஐ. கட்டிடம், டியூக் தெரு, கொழும்பு " என்ற விலாசத்திற்கு எழுதுங்கள். முன்னொருகாலத்தில் கீழ்த்தேசங்களின் நெற்களஞ்சியமாக விளங்கிய இலங்கைக்குத் தேசியப்பெருமையை அளிக்கும் இலக்காகிய இலங்கையின் சுயபூர்த்தியை அடைதற்கு விவசாயிகளாகிய நீங்கள் மட்டுமே உதவமுடியும்.

## தாலாட்டுப் . . . .

(2 ம் பக்கத் தொடர்)

பாடினுள் அன்னே. தாலாட்டுப் பாடலின் சுவையாலோ என்னவோ குழந்தை தூக்கத்தை நாடாமல் அன்னேயின் முகத்தைப் பார்த்துக்கொண்டே சினுங்குகிருன். அன்னேயின் உள்ளம் கற்பனேக் களஞ்சியமாக மாறுகிறது.

**23. கொம்புக் கனியோ**
**கோதுபடா மாங்கனியோ**
**வம்புக் கழுகிறீரோ**
**வாயெல்லாந் தேன் ஊற.**

என்று சொல்லிக் கொண்டே அவனேத் தூக்கி மடியில் நிறுத்தினுள் தாய். சும்மா நிற்பானு தாயின் மடியில்! அங்கும் இங்கும் தாவித் தாவிக் கூத்தாடுகிருன். மந்தியும் மாஞ் சோலேயும் அவள் நினேவில் அலேமோதுகின்றன. மாம்பழங்கள் கனிந்துள்ள கிளேகளே நாடி மந்தி பாயும் காட்சிதோற்றம் தருகிறது.

**24. மந்தி குதிபாயும்**
**மாப்பழுத்த சோலேயிலே**
**தம்பி குதிபாய்வான் தன்**
**தயார் மடிமேலே.**

எனத் தாலாட்டும் புதுமெருகு பெறுகின்றது.

## நவமணிகள் . . . .

(3 ம் பக்கத் தொடர்)

யுயர்ந்த பச்சைக் கற்கள் தென்னமெரிக்காவில் பேரு தேசத்தில் உள்ளன. எகிப்து, உருஷியா, ஆஸ்திரேலியா தேசங்களிலும் மரகத மணிகள் காணப்படும். உலகமுழுவதும் வென்று வெற்றிக் கொடி நாட்ட விரும்பிய மஹா அலெக்ஸாண்டர் என்பவன் தனது உருவப் படம் செதுக்கப்பெற்ற ஒரு மரகதமணியை இரஷாபந்தனமாகக் கழுத்தில் அணிந்திருந்தானும்.

உங்கள் பணத்துக்கு
அதிகம்
கைத்தொழிற் பொருட்காட்சி
# சுவீப்
254 பரிசுகள்
ஒவ்வொரு மாதமும்
1963, பெப்ருவரி மாதம் 14 ந் திகதி
துவக்கம் மாதம் இருமுறை
சீட்டிழுப்பு
ரிக்கற் ஒன்றை வாங்கி
பரிசு ஒன்றைப் பெறுங்கள்

இலங்கை, வாழைச்சேனே ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பிரேஷனுல் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில் இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
ஆர் 10913—5,008 (7/63)